ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2019.03.07 |

## காணி விலைச் சுட்டெண் - 2018 இரண்டாம் அரையாண்டு

**முக்கியமான காரணிகள்**

**ஆ.ஆ.அடிப்படையில் கா.வி.சு அதிகரிப்பு: 18.0%**

**ஆ.ஆண்டு து. சுட்டெண்களின் அதிகரிப்பு**

| | |
|---|---|
| வதிவிடம் | 17.2% |
| வர்த்தகம் | 17.4% |
| கைத்தொழில் | 19.4% |

**கா.வி.சுட்டெண் மற்றும் துணைச் சுட்டெண்களின் போக்குகள்**




**2017 இலிருந்தான காணி விலைச் சுட்டெண்களுக்காக உள்ளடக்கப்படும் புவியியல் பிரதேசங்கள்: கொழும்பு மாவட்டம்**




2018இன் இரண்டாம் அரையாண்டுப் பகுதியில் இலங்கை மத்திய வங்கியினால் தொகுக்கப்படும் கொழும்பு மாவட்டத்திற்கான காணி விலைச் சுட்டெண் 125.9 இனை அடைந்து 2017இன் இரண்டாம் அரையாண்டுப் பகுதியுடன் ஒப்பிடுகையில் 18 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. காணி விலைச் சுட்டெண்ணின் மூன்று துணைச் சுட்டெண்களான வதிவிட, வர்த்தக மற்றும் கைத்தொழில் என்பன இவ்வதிகரிப்பிற்கு பங்களித்தன.

உண்மைச் சொத்துத் துறையின் அபிவிருத்திகளைக் கண்காணிக்கும் பொருட்டு, காணி விலைச் சுட்டெண் அரச மதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்து சேகரிக்கப்பட்ட ஒரு பேர்ச்சு வெற்றுக் காணிக்கான விலையினை பயன்படுத்தி கொழும்பு மாவட்டத்தின்[1] அனைத்துப் பிரதேச செயலகப் பிரிவுகளையும் உள்ளடக்கும் விதத்தில் தொகுக்கப்படுகிறது. காணிப் பயன்பாட்டின் பல்லினத் தன்மையைக் கருத்திற்கொள்கையில், வதிவிட, வர்த்தக மற்றும் கைத்தொழில் காணிகளுக்காக மூன்று வெவ்வேறு துணைச் சுட்டெண்களாகக் கணிக்கப்பட்டதுடன் ஒரே விதமான சீர்மை அமைப்பினைப் பேணுவதற்காக இம்மூன்று துணைச் சுட்டெண்களினதும் சராசரியினைக் கருத்திற்கொண்டு ஒட்டுமொத்த காணி விலைச் சுட்டெண் கணிக்கப்படுகிறது.

[1]காணி விலைச் சுட்டெண் 1998 இலிருந்து 2017 வரை கொழும்பு மாவட்டத்தில் 5 பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கி தொகுக்கப்பட்டிருந்தது. உண்மைச் சொத்துத் துறையில் அண்மையில் ஏற்பட்ட அபிவிருத்திகளின் காரணமாக காணி விலைகளைக் கண்காணிக்கும் முக்கியத்துவம் அதிகரித்து வருவதனை கருத்திற்கொள்கையில் காணி விலைச் சுட்டெண்ணின் புவியியல் ரீதியாக உள்ளடக்கப்படும் கொழும்பு மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேச செயலகப் பிரிவுகளையும் உள்ளடக்கும் விதத்தில் பின்னர் விரிவாக்கப்பட்டது. காணி விலைச் சுட்டெண்ணின் புதிய தொடர்கள் விரிவாக்கப்பட்ட உள்ளடக்கம் மற்றும் திருத்தப்பட்ட அடிப்படையாண்டுடன் 2017 இலிருந்து ஆண்டுக்கு இரு தடவை தொடர்ச்சியாக தொகுக்கப்படும்.

### காணி விலைச் சுட்டெண் பெறுமதிகள் மற்றும் வளர்ச்சி வீதங்கள்

| கொழும்பு மாவட்டத்திற்கான காணி விலைச் சுட்டெண் (அடிப்படை ஆண்டு: 2017அ1) | 2017 1அரை | 2017 2அரை | 2018 1அரை | 2018 2அரை | ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றம் (%) (2018 1அரை) | ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றம் (%) (2018 2அரை) |
|---|---|---|---|---|---|---|
| வதிவிடக் காணி விலைச் சுட்டெண் | 100.0 | 107.0 | 116.5 | 125.4 | 16.5 | 17.2 |
| வர்த்தகக் காணி விலைச் சுட்டெண் | 100.0 | 107.3 | 116.8 | 125.9 | 16.8 | 17.4 |
| கைத்தொழில் காணி விலைச் சுட்டெண் | 100.0 | 106.0 | 115.8 | 126.6 | 15.8 | 19.4 |
| **ஒட்டுமொத்தக் காணி விலைச் சுட்டெண்** | **100.0** | **106.7** | **116.3** | **125.9** | **16.3** | **18.0** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி